11.04.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல் கொள்முதல் பணி தொடக்கம்

காஞ்சிபுரம் மாவட்டம், அவளூர் நேரடி நெல் கொள்முதல் மையத்தில், நெல் கொள்முதல் செய்யும் பணிகள் சனிக்கிழமை தொடங்கின.

காஞ்சிபுரத்தில் நேரடி நெல் கொள்முதல் மையங்களில் கடந்த சில மாதங்களாக நெல் கொள்முதல் செய்யப்படாமல் இருந்தது. இதனால் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் அவதியுற்றனர்.

இடைத் தரகர்கள் மூலம் பல்வேறு இடங்களில் நெல் கொள்முதல் நடைபெற்றது. இது தொடர்பான செய்தி தினமணியில் கடந்த சில தினங்களுக்கு முன் வெளியானது.

இதனைத் தொடர்ந்து விவசாயிகளிடமிருந்து நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உடனடியாக வாங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து அவளூர் உள்பட பல்வேறு கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் நடைபெற்றன.

### பழனி பகுதியில் மாம்பழ சீசன் தொடக்கம்: வரத்து குறைவால் விலை அதிகரிப்பு

பழனி பகுதிகளில் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளதை அடுத்து, பொதுமக்கள் அவற்றை அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். ஆனால், வரத்து குறைவால் மாம்பழத்தின் விலை அதிகமாகவுள்ளது.

பழனியை அடுத்த ஆயக்குடி, கணக்கன்பட்டி, கோம்பை, தேக்கன்தோட்டம், ஆண்டிபட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன. இப்பகுதிகளில் செந்தூரா,

அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்த் மற்றும் கிளிமூக்கு எனப்படும் கல்லாமணி உள்ளிட்ட ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

ஆயக்குடி பகுதியில் சாகுபடி செய்யப்படும் மா வகைகள் தமிழகம் முழுக்க விற்பனை செய்யப்படுவதுடன், கேரளம், ஆந்திரம், கர்நாடகம், புதுச்சேரி பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போது மாம்பழ சீசன் தொடங்கியுள்ளதால், பழனியில் உள்ள ஏராளமான கடைகளிலும், பழனி-கொடைக்கானல் சாலையோரங்களில் சிறு வியாபாரிகளாலும் மாம்பழம் விற்கப்படுகிறது.

இது குறித்து, ஆயக்குடியைச் சேர்ந்த மாம்பழ ஏற்றுமதியாளர் ஷாகுல் கூறியது: பழனி சுற்றுப் பகுதிகளில் கடந்த மாதங்களில் மா மரங்களில் நல்ல முறையில் பூ பிடித்திருந்த போதிலும், பின்னர் அவை உதிர்ந்துவிட்டன. மேலும், வெயில் காரணமாக கருகிவிட்டன. இது தவிர,மாந்தோப்புகளுக்குள் காட்டு யானைகள் புகுந்து சேதப்படுத்தி வருகின்றன. இதனால், மரம், காய்களை காப்பாற்ற விவசாயிகள் நிறைய செலவு செய்துள்ளனர்.

எனவே, கடந்த ஆண்டைக் காட்டிலும் மாம்பழம் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. பங்கனபள்ளி, செந்தூரா வகை மாம்பழங்கள் கிலோ ரூ. 30 முதல் ரூ.35 வரையிலும், கல்லாமணி கிலோ ரூ. 25, கறிக்காய் ரூ.15-க்கு விற்கப்படுகிறது. நடுச்சாலை எனப்படும் ஒட்டு ரகமும் கிலோ ரூ.35 முதல் ரூ.40 வரை விற்கப்படுகிறது. மாம்பழச் சாறு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சுமார் 16 டன் சேர்ந்தால் தான் விவசாயிகள் அனுப்ப முடியும். எனவே, விளைச்சல் குறைவால் இந்தாண்டு மாம்பழம் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கே சரியாக இருக்கும் என்றார்.

## ஆண்டிபட்டி பூ மார்க்கெட்டில் மல்லிகை வரத்து அதிகரிப்பு

ஆண்டிபட்டி பூ சந்தையில் மல்லிகை பூக்களின் வரத்து அதிகரித்துள்ளதால், வெள்ளிக்கிழமை கிலோ ரூ. 100-க்கு விற்பனையானது.

ஆண்டிபட்டி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மல்லிகை, துளசி, கனகாம்பரம், செவ்வந்தி, பிச்சி, சம்பங்கி பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மல்லிகை பூ சீசன் தொடங்குவதால், இப்பூக்கள் வரத்து அதிகரித்துள்ளது. எனவே, கடந்த வாரம் கிலோ ரூ. 300-க்கு விற்கப்பட்ட மல்லிகை பூ, தற்போது ரூ. 100-க்கு விற்கப்படுகிறது. இது குறித்து, மல்லிகை பூ வியாபாரி சாந்தி கூறுகையில், தற்போது, முகூர்த்தம் இல்லாததால் மல்லிகை பூ விலை குறைந்துள்ளது. தமிழ் வருடப் பிறப்பு மற்றும் சித்ரா பௌர்ணமிக்கு பின்னர், மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது என்றார்.

## ரூ. 8.5 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 8.5 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கோபி சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 10,000 வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். அதில், கதளி கிலோ ரூ. 22.30, நேந்திரன் ரூ. 25. செவ்வாழை தார் ரூ. 400, பூவன் ரூ. 320, ரஸ்தாளி ரூ. 275, ரொபஸ்டா ரூ. 220, தேன்வாழை ரூ. 350, மொந்தன் ரூ. 250, பச்சைநாடன் ரூ. 200-க்கு என மொத்தம் ரூ. 8.5 லட்சத்துக்கு விற்பனையானது.

தேங்காய் ஏல விற்பனை: 6000 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் குறைந்தபட்சமாக ரூ. 4.50-க்கும், அதிகபட்சமாக ரூ. 10 வரைக்கும் என மொத்தம் ரூ. 65 ஆயிரத்துக்கு தேங்காய்கள் விற்பனையானது.

## ரூ. 38 லட்சத்துக்கு விளைபொருள்கள் ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 38 லட்சத்துக்கு கொப்பரை, தேங்காய், நிலக்கடலை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

அவல்பூந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1,229 மூட்டைகளில் 60 ஆயிரத்து 451 கிலோ எடையுள்ள கொப்பரையை

விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 54.15-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 53.15-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 53.60-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 45.55-க்கும் என மொத்தம் ரூ. 31 லட்சத்து 2 ஆயிரத்துக்கு விற்பனையானது.

அதேபோல, 6 ஆயிரத்து 256 கிலோ எடைகொண்ட 17 ஆயிரத்து 48 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 16 ஆயிரத்து 615-க்கும், குறைந்தபட்சமாக டன் ரூ. 14 ஆயிரத்து 279 என மொத்தம் 98 ஆயிரத்துக்கு விற்பனையானது.

438 மூட்டைகளில் 13 ஆயிரத்து 876 கிலோ எடைகொண்ட நிலக்கடலையை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக கிலோ ரூ. 50.48- க்கும், குறைந்தபட்சமாக ரூ. 42.09-க்கும் என ரூ. 6 லட்சத்து 17 ஆயிரத்துக்கு விற்பனையானது. மொத்தம், ரூ. 38 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

## ரூ.95 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 95 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 3,581 மூட்டைகளில் 1,75,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 54.55-க்கும், அதிகபட்சமாக ரூ. 56.75-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 41.65-க்கும், அதிகபட்சமாக ரூ. 54.05-க்கும் விற்பனையானது.

மொத்தம், ரூ. 95 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.53 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 42.53 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,530 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,530 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 2.94 டி.எம்.சி.

## 80 சதவீத தேயிலைத் தூள் விற்பனை

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 14-ஆவது ஏலத்தில் 80 சதவீதம் தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏலத்தில் மொத்தம் 2 லட்சத்து 11 ஆயிரத்து 227 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 1 லட்சத்து 25 ஆயிரத்து 421 கிலோவும், டஸ்ட் ரகம் 85 ஆயிரத்து 581 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றிருந்தாலும், குறைந்த அளவில் மட்டுமே தேயிலைத் தூள்களை கொள்முதல் செய்தனர். இதனால், 80 சதவீத தேயிலைத் தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்துக்கும் கடந்த வார விலையே வழங்கப்பட்டது.

மேலும், அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ. 4 வரை விலை உயர்ந்தது. அதன்படி, இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ. 69 முதல் ரூ. 78, உயர் வகை ரூ. 83 முதல் ரூ. 90, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 80 முதல் ரூ. 85, உயர் வகை ரூ. 90 முதல் ரூ. 95 வரையும் விலை கிடைத்தது.

கடந்த சில வாரங்களாக தேயிலைத் தூள் விற்பனையும் அதன் விலையும் குறைந்து வந்த நிலையில், இந்த வாரம் விலை மற்றும் விற்பனையில் எந்தவித மாற்றமும் இல்லாமல் இருந்தது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## குன்னூர் மலைப்பாதையில் பூத்துக் குலுங்கும் குஷன் மலர்கள்

குன்னூர் - மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் குஷன் மலர்கள் பூத்து குலுங்குவதால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குன்னூர் - மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் சேவல் கொண்டை மலர்கள், ஜெகரண்டா மலர்கள், காட்டு சூரிய காந்தி உள்ளிட்ட பல்வேறு வகையிலான மலர்கள் ஆண்டுதோறும் அதன் சீசனுக்கு ஏற்றாற்போல் பூத்துக் குலுங்கி வருகின்றன.

தற்போது, குன்னூர் - மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் உள்ள மரங்களில் மைக்கோ கார்பா எனும் தாவரவியல் பெயர் கொண்ட குஷன் மலர்கள் அதிக அளவில் பூத்துக் குலுங்குகின்றன.

கடல் மட்டத்தில் இருந்து 1219 மீட்டம் உயரம் உள்ள மலைகளில் கூட இம்மரங்கள் வளரும் தன்மைக் கொண்டது. இந்தியாவில் உள்ள பெரும்பலான மலைப் பிரதேசங்களில் உள்ள மரங்களில் இம்மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. இம்மலர் மருத்துவ குணம் கொண்டதால் சித்த மருத்துவர்கள் வயிற்றுப் போக்கு, வாந்தி, அஜீரண கோளாறு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். சாம்பல் நிறத்தில் பூத்துக் குலுங்கும் இந்த மலர்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக அமைந்துள்ளது.

## மருத்துவச்செடி விற்பனை அமோகம்: தண்டராம்பட்டு பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி

தண்டராம்பட்டு பகுதியில் பயிரிடப்பட்டுள்ள இதய நோய்களை குணப்படுத்த பயன்படும் மருத்துவச்செடியின் விலை அதிகரித்துள்ளதால், அந்தப் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தண்டராம்பட்டு வட்டாரத்தில் வனப்பகுதிகள் அதிகமாக உள்ளன. எனவே, வனப்பகுதியை ஒட்டிய பகுதியில் விவசாயிகளால் பயிரிடப்படும் நெல், மணிலா, கரும்பு, வாழை, எள், கேழ்வரகு உ ள்ளிட்ட பயிர்களை வனத்திலிருந்து வரும் காட்டுப் பன்றி, மான், முயல் உள்ளிட்ட விலங்குகள் சேதப்படுத்தி வந்தன.

இதன் காரணமாக வனப்பகுதியை ஒட்டிய பகுதிகளில் விவசாய நிலங்களை வைத்துள்ள விவசாயிகள் மிகுந்த நஷ்டத்துக்கு ஆளாகி

வந்தனர். எனினும், வன விலங்குகளால் சேதப்படுத்தப்படும் வேளாண் பயிர்களுக்கு தமிழக அரசு சார்பில் இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், காட்டு விலங்குகளால் சேதப்படுத்த முடியாத, 6 மாத காலத்துக்குள் அறுவடை செய்யக்கூடிய, மருத்துவ குணம் கொண்ட குவாலிஸ் செடியை விவசாயிகள் பயிர் செய்தனர். இந்தப் பயிர் கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ.15 முதல் 17 வரை விற்பனையானது.

கடந்த 4 மாதத்துக்கு முன்பாக பெய்த கன மழையால் குவாலிஸ் கிழங்குகளும், செடிகளும் நல்ல விளைச்சல் கண்டுள்ளதால், இந்த ஆண்டு குவாலிஸ் கிழங்கு ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.27 வரை விற்கப்படுகிறது. இந்தச் செடியின் தண்டு, இலை ஒரு கிலோ ரூ.1 முதல் ரூ.2 வரை விலை போகிறது. இதனால் தண்டராம்பட்டு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சிடைந்துள்ளனர்.

**பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் பூக்கள் விலை உயர்வு**

பரமத்தி வேலூர் பூக்கள் ஏலச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் சுற்றுப் பகுதிகளில் குண்டுமல்லி, சாமந்தி, சம்பங்கி, அரளி உள்ளிட்ட பூக்களை விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும் பூக்கள் பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி பூக்கள் ஏலச் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஒரு கிலோ குண்டு மல்லி ரூ.100, சம்பங்கி ரூ.100, அரளி 70, செவ்வந்தி ரூ.100, முல்லை ரூ.350-க்கு ஏலம் போனது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஒரு கிலோ குண்டு மல்லி ரூ.130, சம்பங்கி ரூ.140, அரளி ரூ.170 செவ்வந்தி ரூ. 140, முல்லை

ரூ.400-க்கும் ஏலம் போனது. பூக்களின் வரத்து குறைந்த போதும், விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 55.90 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை காலை 55.90 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 74 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 21.72 டி.எம்.சி.யாக இருந்தது.

திடீர் மழை: இந்த நிலையில் வெள்ளிக்கிழமை இரவு மேட்டூர், சேலம் கேம்ப் உள்ளிட்ட பகுதிகளில் கோடை மழை பெய்தது. இதன் காரணமாக மேட்டூர், சுற்றுவட்டாரப் பகுதிகளில் சனிக்கிழமை காலை வெப்பம் தணிந்து காணப்பட்டது. மேட்டூர் பகுதியில் 13 மி.மீ. மழை பெய்தது பதிவாகியுள்ளது.

## விவசாயிகளுக்கு பயிற்சி

அரியலூர் மாவட்டம், தா.பழூரில் அட்மா திட்டத்தின்கீழ் கோவிந்தபுத்தூர் கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப் பள்ளி பயிற்சி வகுப்பு கடந்த ஆறு வாரங்களாக நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் நெற்பயிரின் பருவம் மற்றும் ரகங்கள், விதைநேர்த்தி, திருந்திய நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரித்தல் அடியுரம் இடுதல், நீர் மேலாண்மை, அசோலா இடுவதால் ஏற்படும் நன்மைகள், இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச் சத்து உர நிர்வாகத்தை மேற்கொள்வது, பயிரை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை ஒருங்கிணைந்த முறையில் எவ்வாறு கட்டுப்படுத்துவது, இயந்திர அறுவடை முறைகள், விதை சேமிப்பு ஆகிய தலைப்பின்கீழ் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் பழனிசாமி உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

**கோடை மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் சனிக்கிழமை பெய்த பரவலான மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் நிகழாண்டு வழக்கத்தை விட அதிகமான வெப்ப நிலை பதிவானது. மார்ச் மாதம் முழுவதும் அக்னி நட்சத்திரம் வெயில் போல் வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்ததால், பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியே செல்வதை தவிர்த்தனர்.

வழக்கமாக பங்குனி உத்திரத்தன்று இங்கு மழை பொழிவு இருக்கும். ஆனால் நிகழாண்டு பங்குனி உத்திரத்தன்றும் மழை இல்லை. இதனால் பொதுமக்கள் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில், சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மிதமான சாரல் மழை தொடங்கியது. பின்னர் நின்றது. ஆனால், மாலை 3.30 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பெய்தது. இதனால் நாகர்கோவில் நகரில் மீனாட்சிபுரம், கோட்டாறு, செம்மாங்குடிசாலை, ஆட்சியர் அலுவலக சாலை, வடசேரி உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது.

அணைப் பகுதிகளிலும் மிதமான மழை பெய்துள்ளதால் அணையின் நீர் மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. இந்த மழை பூதப்பாண்டி, தாழக்குடி பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நெல் உள்ளிட்ட பயிர்களுக்கு ஏதுவாக இருக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

மாவட்டத்தில் பெய்த மழை அளவு: நாகர்கோவில் - 40.4 மி.மீ., இரணியல்- 18 மி.மீ., மாம்பழத்துறையாறு - 17 மி.மீ., ஆணைக்கிடங்கு 15 மி.மீ., முள்ளங்கினாவிளை 14 மி.மீ., அடையாமடை 8 மி.மீ., பாலமோர் 5.2 மி.மீ., குளச்சல் 3 மி.மீ., பேச்சிப்பாறை 2.2 மி.மீ., சிற்றாறு 2 - 2 மி.மீ., பெருஞ்சாணி - 2 மி.மீ., பூதப்பாண்டி 1.5 மி.மீ., சிற்றாறு 1 - 1 மி.மீ.

**மரம் தரும் வரம், நிரந்தரம்!**

வருங்காலத்தில் தண்ணீருக்கு நாடுகளிடையே போர் வரும் என்பது நேர்ந்துவிடும் போலிருக்கிறது. மகாராஷ்டிரா மாநிலம் முக்கிய எட்டு நகரங்களில் ஒன்றான நாந்தேட் நகரில் தண்ணீருக்காக கலவரம் நிகழும் சூழல் உள்ளது. லத்தூர் மாவட்டத்தில் கலவரத்தைத் தடுக்க 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது மே மாதம் இறுதி வரை அமலில் இருக்கும்.

தண்ணீருக்காகப் போராடும் மக்களை கட்டுப்படுத்துவது காவல் துறைக்கு இக்கட்டான பணி. லத்தூர் நகருக்குத் தண்ணீர் அளிக்கும் ஏரியின் கொள்ளளவில் ஆறு சதவீதம் தான் உள்ளது. இது எவ்வாறு ஐந்து லட்சம் மக்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்? மாதம் ஒருமுறைதான் வீடுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும் நிலை. ஏரிகளுக்கு காவல் துறையின் பாதுகாப்பு, தண்ணீர் ஏற்றிச் செல்லும் லாரிகளுக்கு காவல் என்ற அளவில் மாரத்வாடா பகுதிகளில் தண்ணீர்ப் பற்றாக்குறை தலைதூக்கியுள்ளது.

தண்ணீரின் அருமை தட்டுப்பாடு ஏற்படும்போது புரியும். மழை வெள்ளத்தை நொந்து கொள்பவர்கள் சிந்திக்க வேண்டும். நீர் வளத்திற்கும் பசுமை வனங்களுக்கும் ஒரு பிணைப்பு உண்டு. அதை உணராது இயற்கையை சாடுவதால்தான் பல இடங்களில் நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. தண்ணீருக்குப் போராடும் ஏழை மக்களை அமைதிப்படுத்துவது காவல் துறைக்கு மிகப்பெரிய சவால். பசுமை காடுகள் வானம் குளிர செய்து மழை பொழிய வைக்கிறது என்றால் மிகையில்லை. அது சத்தியம்.

வன மஹா உத்சவம் என்று சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் விதமாக மரம் நடும் விழா 1947-லேயே துவங்கியது. முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், பிரதமர் நேரு பங்கு கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் பொது சபை 1971-ஆம் ஆண்டு பாரீஸில் நடைபெற்ற கருத்தரங்கில், காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கவும் வன அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த உலக காடுகள் தினம் மார்ச் மாதம் அனுசரிக்க வேண்டும் என்ற முடிவை பிரகடனப்படுத்தியது.

2011-ஆம் ஆண்டு சர்வதேச வனப் பாதுகாப்பு ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்ததைத் தொடர்ந்து, மார்ச் மாதம் 21-ஆம் தேதி வனப் பாதுகாப்பு தினம் எல்லா நாடுகளிலும் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானம் ஐ.நா. பொது சபையின் 2012-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகளால் சூழப்பட்டுள்ளது. சுமார் 160 கோடி மக்கள் வனங்களை நம்பி உயிர் வாழ்கிறார்கள். கடலூர் மாவட்டம் பிச்சாவரம் சதுப்பு நில தாவர வகைகள் கொண்ட மாங்ரோவ் காடுகள் புயல், சுனாமி போன்ற பேரிடர் நேர்வுகளின் தாக்கத்தைத் தணித்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

காடுகளின் பொருளாதார, சுகாதார, சமுதாய மேம்பாட்டிற்கான பங்களிப்பு மற்றும் சுற்றுப்புற சூழல்பாதுகாப்பு அளிக்கும் வலிமையை உணராமல் மனிதன் மனம்போன போக்கில் அழித்தொழிப்பில் உழல்வதை உணரவைக்கும் வகையில் கடும் நடவடிக்கை உலக நாடுகள் எடுக்க வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் தலைமை வலியுறுத்தியுள்ளது.

ஆண்டுதோறும் சராசரி 13 மில்லியன் ஹெக்டேர் பரப்புள்ள காடுகள் அழிக்கப்படுகின்றன என்பது அதிர்ச்சி தகவல். இம்மாதிரி வனங்களை அழிப்பதால் 20% வரை நச்சு அமிலம் கலந்த வாயு வியாபிப்பதைத் தடுக்க முடியாமல் சீதோஷ்ண நிலை மாற்றத்திற்கும் புவியின் வெப்ப அதிகரிப்பிற்கும் வழிவகுக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை தலைவர் பான் கி மூன் தனது செய்தியில் வனங்களை பாதுகாக்க எடுக்கும் முயற்சி, அதற்கான முதலீடு இந்த வையம் உய்வதற்கான காப்பீடு என்பதை

வலியுறுத்தியுள்ளார்.

இப்போதே நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே போவதைப் பார்க்கிறோம். மரங்கள் தான் நீர் நிலைகளின் பாதுகாவலன். காடுகளும் நீர்நிலைகளும் உயிரினங்களைப் பாதுகாக்கின்றன. மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்கின்றன என்ற விழிப்புணர்வு நமது ஒவ்வொரு செயலிலும் பிரதிபலிக்க வேண்டும். இந்தியா 1950-லிருந்தே வனப் பதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி வருகிறது. தொன்றுதொட்டு இந்திய கலாசாரத்தில் இயற்கை, நதிகள், தாவரவகைகள், மரங்கள் வழிபாடு மக்கள் வாழ்க்கையோடு ஒன்றியுள்ளது. ஸ்ரீராமர் சீதையோடும் லஷ்மணனோடும் வன வாசம் இருந்தது காடுகளின் புனிதத் தன்மையை மக்களுக்கு உணர்த்தியது. இந்தியாவின் வன செயல்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் வனங்களின் பரப்பளவும், மரங்களின் அடர்த்தியும் மொத்த நிலப்பரப்பில் 33% அடைய வேண்டும் என்பதுதான். உலகில் 31% நிலப்பரப்பில் காடுகள் அடர்ந்துள்ளன. ஆனால், இந்தியாவில் காடுகளின் பரப்பளவு 21.34% தான். ஆர்க்டிக் குளிர்ப் பிரதேசம், ரஷியா, சீனா, அமெரிக்கா நாடுகளில் காடுகள் அதிகம். அமேசான் காடு ஒன்றே பல்லாயிரக்கணக்கான ஜீவ ராசிகளை உள்ளடக்கியது.

மக்கள்தொகை பெருக்கத்தால் பல நாடுகளில் வனங்களின் அளவு சுருங்கும் நிலை உள்ளது. இந்தியாவின் மக்கள்தொகை கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்தாலும், காடுகளின் அடர்த்தி சுருங்கவில்லை என்பது ஓரளவு ஆறுதலான செய்தி. அதற்கு முக்கியக் காரணம் 100% வனங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை காடுகளின் பரப்பளவு 30,850 சதுர கிலோ மீட்டர். இது மொத்த நிலப் பரப்பில் 23.72%. காப்புக் காடுகள் (ரிசர்வ்டு ஃபாரஸ்ட்) மற்றும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வனவிலங்கு

பூங்காக்கள், பறவை சரணாலயம், தாவர வகை பூங்காக்கள், கடல்சார் வனங்கள் வன இலாகாவால் சிறப்பாக பராமரிக்கப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 2015 வரை வனப் பரப்பை கணக்கெடுக்கையில் சுமார் 2,501 சதுர கி.மீ. உயர்ந்திருக்கிறது. இது நாட்டிலேயே அதிகமான வளர்ச்சி என்பது தமிழ்நாட்டுக்குப் பெருமை. ஒரு மரம் வெட்ட நேர்ந்தால் 10 மரங்கள் நட வேண்டும் என்பது விதி. ஆனால், அது நடப்பதில்லை. சென்னையிலேயே எவ்வளவோ பசுமை சின்னங்களாக இலவு, தான்றி, நீர் மருது, நீர் கடம்பை, மகிழம், அழிஞ்சி புன்னை, வேங்கை, ஆலமரம், நாவல் போன்ற வானோங்கிய மரங்கள் உள்ளன. ஆனால், அவற்றில் இரக்கமின்றி ஆணி அடித்து விளம்பரப் பலகை வைக்கிறார்கள். மரங்கள் விரைவில் ஏன் பட்டுப்போகாது? ராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதைக்கு நிழல் கொடுத்த புனித அசோக மரம் அழிந்து வரும் மரப்பட்டியலில் உள்ளது. பல தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் வனத் துறையோடு மரம் நடுவதிலும் வளர்ப்பதிலும் பங்கு கொள்கின்றன. காடுகளைத் தவிர்த்து மற்ற இடங்களில் உள்ள மரங்களின் அடர்த்தி ட்ரீ கவர் 3.46% தான். அதாவது, 4,505 சதுர கி.மீ. மரங்களின் அடர்த்தி இப்போதுள்ள மூன்றரை சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயரவேண்டும். இது தொடர்ந்து நடைபெறவேண்டும்.

பெருவாரியாக மாணவர்களையும் இளைஞர்களையும் ஈடுபடுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, அரசியல் சாசனத்தில் 51ஏ உறுப்பில் ஒவ்வொறு இந்தியனும் ஆற்ற வேண்டிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளதை நாம் உணரவேண்டும். இதனை மனதில் கொண்டு 2011-இலிருந்து இதுவரை 262 லட்சம் மரக் கன்றுகளை வனத்துறை நட்டுள்ளது. அது தவிர, வனங்கள் பசுமைத் திட்டம் ஏழாண்டு தொடர் திட்டமாக 2012-ஆம் ஆண்டிலிருந்து 2019

வரை அமலில் இருக்கும். இதற்கு 686 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசின் தொலைநோக்குத் திட்டம் விஷன் 2023-இல் சுற்றுப்புறச் சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள், வனப்பகுதிகளை அதிகப்படுத்துதல், நீர்நிலை பாதுகாப்பு, நிலத்தடி நீரைச் சேமித்து அதன் நிலை உயரச்செய்தல், கடலோரப் பகுதி பாதுகாப்பு, பலவகை உயிரினப் பாதுகாப்பு, இயற்கை வளங்கள், நிலப்பரப்பு, அதில் உள்ள மண் வளங்கள் பாதுகாத்தல் இதில் அடங்கும். வனப் பாதுகாப்பில் வனத் துறைக்கு மட்டுமல்ல, காவல் துறைக்கும் பொறுப்பு இருக்கிறது. பர்கூர், சத்தியமங்கலம் வனப் பகுதிகளில் வீரப்பன் கூட்டாளிகளின் அக்கிரமங்கள் 1980-லிருந்து 20 ஆண்டுகள் தொடர்ந்த போதுதான் அவர்களின் அட்டகாசத்தை அடக்கவும் வனங்களைப் பாதுகாக்கவும் சிறப்பு அதிரடிப்படை, எஸ்.டி.எஃப். உருவாக்கப்பட்டது. 2004-ஆம் ஆண்டு வீரப்பன் கதை முடிக்கப்பட்ட பிறகு, சிறப்புப் படை தொடர்ந்து வனப்பகுதியை வன இலாக்காவோடு இணைந்து பாதுகாத்து வருகிறது.

வனப்பகுதிகள் நக்ஸலைட்டுகள், பயங்கரவாதிகளின் புகலிடமாக ஆவதைத் தடுக்கவேண்டிய பொறுப்பும் சிறப்பு காவல் படைக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

வட மாநிலங்களில் உள்ள காடுகளில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதைத் தடுக்க, மத்திய அரசு வனவிலங்குகளை வேட்டையாடும் கொடூரர்களைக் கட்டுக்குள் கொண்டுவர சிறப்பு புலனாய்வு பிரிவு ஒன்றினை உருவாக்கியுள்ளது. வனங்களை அழியாமல் பாதுகாத்தால் தான் அவை வனவிலங்குகள் சுதந்திரமாக ஜீவிக்க அடைக்கலம் அளிக்கும்.

வனவிலங்கு வேட்டையாடலில் சர்வதேச குற்றவாளிகள் ஈடுபடுகின்றனர் என்பதையும் சர்வதேச காவல்துறையுடன் (இண்டர்போல்) இணைந்து செயல்பட வேண்டும் என்ற முன்னாள்

டி.ஜி.பி. சுப்ரமணியன் தலைமையிலான குழு அறிக்கையின் படி மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

2030-ஆம் ஆண்டிற்குள் தொய்வில்லாது பரிமளிக்கும் வளர்ச்சியை உலகில் எல்லா நாடுகளும் அடைய வேண்டும் என்ற நோக்கத்தை ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. அதற்கு உலக நாடுகள் எடுக்கவேண்டிய முயற்சிகளின் அடித்தளம் வனம், நீர்நிலை பாதுகாப்பு. அப்துல் கலாம் வலியுறுத்தியது போல ஒவ்வொருவரும் பத்து மரங்கள் பேணினால் தமிழகத்திலே 70 கோடிக்கும் மேல் மரங்கள் செழிக்குமே! சிந்தித்துச் செயல்பட வேண்டிய தருணமிது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடை வெயில்: பழம் விலை உயர்வு

காஞ்சிபுரம் : கோடை காலம் துவங்கி விட்டால், அனைத்து பழங்களின் விலையும் அதிகரித்துள்ளது.

ஆண்டு முழுவதும் கிடைக்க கூடிய வாழை பழத்தை தவிர, பெரும்பாலான பழங்கள் கோடையில் தான் அதிக அளவில் விளைகின்றன. வெயிலுக்கு இதமான, தாகத்தை தீர்க்கும் தர்பூசணி, முலாம் பழம், திராட்சை, சாத்துக்குடி, கமலா ஆரஞ்சு போன்ற பழங்கள், காஞ்சிபுரத்தில் அதிக அளவில் விற்பனைக்கு கிடைக்கின்றன.அதிகமானோர் விரும்பி வாங்குவதால், பழங்களின் விலை உயர்ந்துள்ளது.

அதிக அளவு பழங்கள், ஆந்திராவில் இருந்து தான் வருகின்றன. நாங்கள் நேரடியாக அங்கு சென்று மொத்தமாக வாங்கி வருகிறோம். நாங்கள் மட்டும், ஒரு நாளைக்கு, 2,000 கிலோ வரை வாங்குவோம். மற்ற கடைகள் சேர்த்து, 7,000 கிலோ பழங்கள் வருகின்றன. நாங்கள் நேரடி

கொள்முதல் செய்வதால், மற்ற கடைகளில் விலை மாறுபடும். கடை மற்றும் தரத்தை பொறுத்து விற்கப்படுகிறது.

## சீசன் முடிந்தது; நாக்பூர் ஆரஞ்சு விலை அதிகரிப்பு

திண்டுக்கல்:சீசன் முடிந்ததால் நாக்பூர் ஆரஞ்சு விலை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 1800 ஏக்டேரில் ஆரஞ்சு சாகுபடியாகிறது. திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் உள்ளூர் மற்றும் நாக்பூரிலிருந்து 5 டன் ஆரஞ்சு விற்பனைக்கு வருகிறது. உள்ளூர் ஆரஞ்சை விட, நாக்பூர் ஆரஞ்சு விலை குறைவால் மக்களிடத்தில் மவுசு அதிகமாகவே உள்ளது.

தற்போது நாக்பூரில் ஆரஞ்சு சீசன் முடிவுக்கு வந்ததால், விலை அதிகரித்த வண்ணம் உள்ளது.

கடந்த வாரம் உள்ளூர் ஆரஞ்சு ஒரு கிலோ ரூ.80, நாக்பூர் ஆரஞ்சு ஒரு கிலோ ரூ.50 க்கும் விற்றது. நாக்பூர் ஆரஞ்சு நேற்று முன் தினம்

ஒரு கிலோ ரூ.70 க்கு விற்றது. நேற்று ஒரு கிலோ ரூ.90 க்கு விற்பனையானது.

இதே போல் வரத்து குறைந்த கருப்பு, பச்சை திராட்சை விலையும் அதிகரித்துள்ளது. கடந்த வாரம் கருப்பு திராட்சை ஒரு கிலோ ரூ.100, பச்சை திராட்சை

ரூ.90 க்கும் விற்றது. நேற்று கருப்பு திராட்சை ரூ.130, பச்சை திராட்சை ரூ.120 க்கு விற்றது.

## செந்துறையில் செண்டு 'பூ' கிலோ ரூ.30

செந்துறை:செந்துறை பகுதியில் விளையும் செண்டு 'பூ' கிலோ ரூ.30 வரை விலை போகிறது.

மணக்காட்டூர், தொண்டபுரி, செந்துறை, அடைக்கனுார், சரளப்பட்டி, பிள்ளையார்நத்தம், மேற்கிப்பட்டி, செந்துறை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் செண்டு 'பூ' அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர்.

நடவு செய்ததில் இருந்து 90 நாட்களில் பூக்க துவங்கிவிடும். தொடர்ந்து ஒரு மாதத்திற்கு பலன் தரும்.

தற்போது நிலவி வரும் வறட்சியால் குறுகிய அளவு நிலப்பரப்பிலேயே சாகுபடி செய்துள்ளனர். இப்பகுதியில் விளையும் பூக்களை மதுரை மற்றும் திண்டுக்கல் மார்க்கெட்டில் விற்பனை செய்கின்றனர்.

ஒருமாத்திற்கு முன் கிடைத்த விலை காட்டிலும் தற்போது கூடுதல் விலை கிடைத்தபோதிலும் விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலையில் உள்ளனர். தண்ணீர் பற்றாக்குறையால் குறைந்த நிலப்பரப்பில் சாகுபடி செய்து, விளைச்சலும் குறைவாக உள்ளதே இதற்கு காரணமாகும்.

விவசாயி தங்கம் கூறியதாவது' நான்கு ஆண்டுகளாக போதிய மழை இல்லததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இருக்கும் தண்ணீரை கொண்டு சிறிய அளவில் சாகுபடி செய்து வருகிறோம். முகூர்த்த நாட்களில் பூவிற்கு கூடுதல் விலை கிடைக்கும்'என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மக்கள் அதிகம் பயன்படுத்த துவக்கம் சிறுதானியம் பயிரிட முழு மானியம்

குறிஞ்சிப்பாடி, :மக்கள் அதிகளவில் பயன்படுத்த துவங்கியுள்ள சிறுதானிய பயிர்களை பயிரிட தமிழக அரசு முழு மானியம் அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.தமிழகத்தில் சிறுதானியங்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. பல்வேறு நோய்களுக்கான இயற்கை மருந்தாக சிறுதானியங்களை மக்கள் அதிகளவில் பயன்படுத்த துவங்கியுள்ளனர். ஆனால் அதற்கேற்றவாறு அதனை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே முழு மானியம் வழங்கி சிறுதானியம் பயிரிட அரசு புத்துயிர் கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

சிறுதானியம் என்பது புல்வகை தாவரங்களிலிருந்து எடுக்கப்படும் ஒரு வகை தானியங்களாகும். சாமை, தினை, கேழ்வரகு, கம்பு, சோளம், காக்கா சோளம், குதிரைவாலி, வரகு உள்ளிட்ட தானியங்களை நமது மூதாதையர்கள் பயன்படுத்தியதால் சராசரி வயது 90க்கு மேல் இருந்தது. சிறுதானியம் உண்பவர்களின் எண்ணிக்கை குறைந்த காரணத்தினால், லாபமற்ற தொழிலை செய்ய முன்வராததால் விவசாயிகள் சிறுதானியம் பயிரிடுவதை நிறுத்திவிட்டனர்.

எனவே சிறுதானிய பயிருக்கு புத்துயிர் அளிக்க அரசு முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இதுகுறித்து விவசாயி குமரகுரு கூறுகையில், ‘சிறுதானியம் என்பது எவ்வித பக்கவிளைவும் இல்லாதது. இருந்தும், சிறுதானியம் பயிர் வைப்பது குறைந்துவிட்டது. கேழ்வரகு, சோளம், கம்பு போன்றவற்றை பார்ப்பதே அரிதாகிவிட்டது. அதற்கு புத்துணர்வு கொடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்தால் தான் விவசாயிகள் பயிர் வைக்க முன்வருவார்கள். கேழ்வரகை இன்றைக்கு படித்தவர்கள், பணக்காரர்கள் என எல்லோருமே சாப்பிட துவங்கி விட்டார்கள். சிறுதானிய பயிர் வைக்க ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் உரம், ஏர்உழுதல், எரு உள்ளிட்ட செலவிற்கு ரூ.பத்தாயிரம் செலவாகும். சிறுதானியம் இன்றைய வாழ்க்கை சூழலில் அத்தியாவசிய, மருத்துவகுணங்களும் நிறைந்தவையாக உள்ளது.

எனவே அரசு முழுமானியம் வழங்க வேண்டும். இவற்றிற்கு தேவையான பூச்சி மருந்து, எரு உள்ளிட்டவற்றிற்கான செலவை அரசே ஏற்க வேண்டும். இவற்றை மானிய விலையில் கொடுக்க வேண்டும். இயற்கை விவசாயிகளைபோல் சிறுதானிய விவசாயிகளையும் அரசு தத்தெடுக்க வேண்டும். கம்பு ஆனிபட்ட விதை ஒன்றரை கிலோ 380 ரூபாய். ஏக்கருக்கு இரண்டு பாக்கெட் தேவைப்படும். இதை தனியாரிடமிருந்து தான் வாங்க வேண்டும். அரசிடமிருந்து வாங்கினால் முளைக்காது. இந்நிலை மாற வேண்டும். தரமான விதைகளையும் அரசு வழங்க வேண்டும்’ என்றார்.

கள்ளக்குறிச்சி வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ1.30 கோடிக்கு பருத்தி ஏலம்

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.1.30 கோடிக்கு பருத்தி ஏலம் போனது. ஆனால் பருத்திக்கு போதிய விலை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.கள்ளக்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் புதன்கிழமையில் பருத்தி சந்தை நடைபெற்று வருகிறது. இதில் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் சின்னசேலம், தியாகதுருகம் மற்றும் கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் பருத்தியை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

கோவை, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் மறைமுக விலை மூலம் பருத்தியை வாங்கி செல்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த பருத்தி சந்தைக்கு 892 விவசாயிகள் 8,450 மூட்டை பருத்தி எடுத்து வந்தனர். இதில் எல்ஆர்ஏ பருத்தி குறைந்த பட்சம் ரூ.4,319க்கும், அதிகபட்சம் ரூ. 4769க்கும் ஏலம் போனது. சுவின் பருத்தி குறைந்த பட்சம் ரூ.5933க்கும், அதிக பட்சம் ரூ.6106க்கும் விற்பனையானது.

நேற்று ரூ. ஒரு கோடியே 30 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது என வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தின் மேலாண்மை இயக்குனர் பாண்டியன் தெரிவித்தார். வரும் வாரங்களில் இன்னும் அதிக அளவில் பருத்தி விற்பனைக்கு வரும் என்றும் கூறினார்.இதனிடையே பருத்திக்கு போதிய விலை கிடைக்க வில்லை என்று விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர். ஒரு ஏக்கரில் 15 முதல் 20 மூட்டை பருத்திகள் கிடைக்கும் என்றும் மழை காரணமாக விளைச்சல் குறைந்து விட்டதாகவும் குறிப்பிட்டனர்.

தேக்கடியில் கொட்டியது கனமழை பெரியாறுக்கு நீர்வரத்து துவங்கியது

கூடலூர், : பெரியாறு மற்றும் தேக்கடி பகுதிகளில் கனமழை பெய்ததால், அணைக்கு நீர்வரத்து தொடங்கியுள்ளது.

நேற்று காலை நிலவரப்படி 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் 110.60 அடியாகவும், நீர்வரத்து வினாடிக்கு 100 கனஅடியாகவும் இருந்தது. வினாடிக்கு 100 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு 1006 மில்லியன் கனஅடி. பெரியாறு மற்றும் தேக்கடி பகுதிகளில் நேற்று முன்தினம் கனமழை பெய்தது. இதனால் அணைக்கு நீர்வரத்து தொடங்கியுள்ளது.

71 அடி உயரமுள்ள வைகையின் நீர்மட்டம் 36.45 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 20 கனஅடி. மதுரை குடிநீருக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு 694 மில்லியன் கனஅடி.

57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 33.50 அடியாக உள்ளது. நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றம் இல்லை. அணையின் இருப்பு 109.93 மில்லியன் கனஅடி.

126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 93.97 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 3 கனஅடி. நீர் வெளியேற்றம் வினாடிக்கு 3 கனஅடி. அணையின் இருப்பு 53.63 மில்லியன் கனஅடி. பெரியாறில் 12 மி.மீ, தேக்கடியில் 134 மி.மீ மழை பதிவாகி இருந்தது.

## ஊட்டச்சத்து இருக்கிறதா, இல்லையா? மகசூல் அள்ள மண் சோதனை வேளாண்துறை அட்வைஸ் ஆழம் எவ்வளவு?

மாதிரி எடுக்கும் ஆழம் புல் மற்றும் புல்வெளி 2 அங்குலத்தில் 5 செ.மீ, நெல், கேழ்வரகு, நிலக்கடலை, கம்பு மற்றும் சில தானியப் பயிர்கள் 6 அங்குலம் 15 செ.மீ, பருத்தி, கரும்பு, வாழை, மரவள்ளி மற்றும் காய்கறிகள் 9 அங்குலம் 22 செ.மீ, நிரந்தரப்பயிர்கள் , மழைப்பயிர்கள், பழத்தோட்டப்பயிர்கள் 12, 24, 36 அங்குல ஆழங்களில் 3 மண் மாதிரிகளை எடுக்க வேண்டும். 30, 60, 90 செ.மீ ஆழங்களில் 3 மண் மாதிரிகளை எடுக்க வேண்டும்.

அருப்புக்கோட்டை,: மானாவாரி நிலங்களில் நீர் பற்றாக்குறை மற்றும் மண்ணின் ஊட்டச்சத்து குறைபாடுகளின் காரணமாக பயிர்களின் மகசூல் வெகுவாக குறைந்து வருகிறது. மண்ணின் பண்புகள் உரமேலாண்மை முறைகளை கையாண்டு வந்தால் மண்வளத்தினை பாதுகாப்பதோடு, பயிர் விளைச்சலையும் அதிகரிக்கலாம். இதற்கு ஒரே வழி மண்மாதிரி எடுத்து பரிசோதனை செய்வதே ஆகும்.

எப்படி எடுக்கலாம்:

மண் மாதிரி எடுக்கும் பகுதி முழுவதையும், குறுக்கும், நெடுக்கமாக நடந்து அப்பகுதியில் காணப்படும் நிலச்சரிவு, மண்ணின் நிறம், நயம், மேலாண்மைமுறை பயிர் சுழற்சி இவற்றிற்கு ஏற்றாற்போல் பல பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தனித்தனியாக மண்மாதிரி சேகரிக்க வேண்டும். முக்கியமாக ரசாயன உரங்கள், மக்கிய எரு மற்றும் குப்பை உரங்கள் பூஞ்சாண மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இடப்பட்ட பகுதிகளில் மாதிரிகள் எடுப்பதை தவிர்க்கவேண்டும். வயலின் வரப்பு பகுதிகள், வாய்க்கால்கள், மரத்தடி நிழல், உரக்குழிகள், கிணற்றுப்பகுதி இவற்றிலும் மண்மாதிரி எடுக்கக்கூடாது.

அதிகபட்சமாக 5 ஹெக்டருக்கு ஒரு மாதிரியும், குறைந்தபட்சம் கால் ஹெக்டேருக்கு ஒரு மாதிரியும் தயாரிக்க வேண்டும். நிலம் தரிசாக இருக்கும் காலத்தில் மண் மாதிரிகள் எடுக்கலாம். உரமிட்டவுடன் சேகரிக்கக்கூடாது. குறைந்தது 3 மாதம் இடைவெளி தேவை. பயிர்கள் உள்ள நிலங்களில் மண்மாதிரி எடுக்கக்கூடாது. மண்மாதிரி எடுக்கவேண்டிய இடத்தில் உள்ள இலை, சருகு, புல், கற்கள் போன்றவற்றை முறையாக வயல்மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்தவேண்டும்.

மண்வெட்டிகூடாது:

மண் மாதிரி எடுக்கும்போது ஆங்கில எழுத்து வி போல் மண்வெட்டியால் இருபுறமும் வெட்டி அவ்விடத்தில் உட்புறமண்ணை நீக்கிவிட வேண்டும். பின்பு வி யின் இருபுறமும் 15 செ.மீ அளவு கரண்டி மண்மாதிரி

சேகரிக்கவேண்டும். குறைந்தபட்சம் ஒரு ஹெக்டேரில் 10 முதல் 20 இடங்களில் மாதிரிகள் சேகரிக்கவேண்டும். ஈரமான மண்மாதிரிகளாக இருந்தால் முதலில் அதனை நிழலில் உலர்த்தவேண்டும். நுண்ணூட்டங்கள் அறிய வேண்டும் என்றால் எவர்சில்வர் அல்லது பிளாஸ்டிக் குப்பி மூலம் மண்மாதிரிகளை எடுத்து பிளாஸ்டிக் வாளியில் சேகரிக்கவேண்டும். மண்வெட்டி மற்றும் இரும்புச்சட்டிகளை பயன்படுத்தக்கூடாது.

சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகளை ஒரு பிளாஸ்டிக் வாளியில் போட்டு நன்றாக கலக்கி அதிலிருந்து ஆய்வுக்கு அரை கிலோ மண்மாதிரியை கால் குறைப்பு முறையில் எடுக்க வேண்டும். மண்ணை சுத்தமான சாக்கு அல்லது பாலித்தீன் தாள் மீது பரப்பி அதை நான்காக பிரித்து அரை கிலோ அளவு வரும்வரை திரும்ப திரும்ப கையாளவேண்டும். மேற்கூறப்பட்ட வழிமுறைகளை பின்பற்றி விவசாயிகள் மண்மாதிரிகளை எடுத்து மாவட்டந் தோறும் உள்ள மண்பரிசோதனை நிலையங்களில் அல்லது வேளாண் அறிவியல் நிலையங்களில் கொடுத்து மண்வள அட்டையினை பெற்று, அதன்படி எரு உர நிர்வாகம் செய்து பயிர் மகசூலை அதிகரிக்கலாம். இத்தகவலை கோவிலாங்குளம் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் பால்பாண்டி, மண்ணியல் துறை உதவி பேராசிரியர் பாக்கியாத்து சாலிகா தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மொடச்சூர் சந்தைக்கு கர்நாடக, ஆந்திர மாநில பருப்பு–உளுந்து வரத்து அதிகரிப்பு



கோபி,

மொடச்சூர் சந்தைக்கு கர்நாடக, ஆந்திர மாநில பருப்பு மற்றும் உளுந்து வரத்து அதிகமாக இருந்தது.

<u>மாட்டுச்சந்தை</u>

கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள மொடச்சூர் சந்தையில் வாரந்தோறும் சனிக்கிழமை ஆடு, மாடு, காய்கறிகள் மற்றும் மளிகை பொருட்கள் விற்பனை நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று நடந்த மாட்டுச்சந்தைக்கு கோபி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 600 மாடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

இதில் ஜெர்சி இன பசுமாடு ஒன்று ரூ.35 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை விற்பனையானது. இதேபோல் கொங்கு இன பசுமாடு ஒன்று ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரத்துக்கும், எருமை மாடு ஒன்று ரூ.40 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரத்துக்கும் விற்பனையானது. சிறுவலூர், திங்களூர், சீனாபுரம், திருப்பூர், பெருந்துறை, அந்தியூர் ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் மாடுகளை விலை பேசி பிடித்துச்சென்றனர்.

<u>பருப்பு</u>

இதேபோல் மொடச்சூர் சந்தையில் நேற்று பருப்பு வகைகளும் விற்பனை செய்யப்பட்டன. கர்நாடகா மாநிலத்தில் இருந்து துவரம் பருப்பும், ஆந்திர மாநிலத்தில் இருந்து உளுந்து மற்றும் கோபி பகுதியில் இருந்து மற்ற பருப்பு வகைகளும் விற்பனைக்கு அதிகஅளவில் கொண்டு வரப்பட்டு இருந்தன.

இதில் துவரம் பருப்பு ஒருபடி ரூ.110 முதல் ரூ.120 வரையும், உளுந்து ரூ.120 முதல் ரூ.130 வரையும், பாசிப்பயிறு ரூ.90–க்கும், அவரை பருப்பு ரூ.60–க்கும், கொள்ளு ரூ.35–க்கும், பச்சைப்பட்டாணி ரூ.40–க்கும் விற்பனையானது. கோபி மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த ஏராளமான பெண்கள் சந்தைக்கு வந்து வியாபாரிகள் மற்றும் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக விலை பேசி தங்களுக்கு தேவையான பருப்பு வகைகளை வாங்கிச்சென்றனர்.

**கோடைகால பராமரிப்பு, உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**



கோழிப்பண்ணையாளர்கள், கோடைகால பராமரிப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- அடுத்த 4 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 1 மி.மீ. மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. மற்ற நாட்களில் மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 6 கி.மீ. வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசும்.

வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 102.2 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 80.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 73, 70, 63, 63 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 40, 32, 30, 28 சதவீதமாகவும் இருக்கும்.

பாதுகாப்பு முறை

கோடை மழைக்கான வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது. மேகமூட்டம் சற்றே அதிகமாகும். ஆதலால் பகல் வெப்பம் சென்ற வாரத்தைவிட குறையும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஆயினும் குறையும் வெப்பத்தின் அளவு கோழிகளுக்கு முழு அளவில் சாதகமாக இருக்க வாய்ப்பில்லை. ஆகவே, கோழிகளில் வெப்ப அயற்சி தொடரும் வாய்ப்பு உள்ளது. அதிக வெப்பத்திற்கு கோழிகள் தற்போது பழகிக்கொண்டு வருவதால், குறைந்த முட்டை உற்பத்தி மற்றும் முட்டை எடை, தகுந்த கோடை மேலாண்மை முறைகளால் மீண்டும் இயல்பான நிலையை அடைய முயற்சிக்கும். குறைவான தீவன எடுப்பும், அதற்கேற்ற முட்டை உற்பத்தியும் கோடை காலத்தில் உற்பத்தி செலவை குறைக்க உதவும் காரணிகள். தகுந்த கோடை மேலாண்மை, குறிப்பாக நீர் மேலாண்மை, முட்டை உற்பத்தி செல வைக் குறைக்க வல்லது.

கடந்த வாரம் கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல்மூச்சுக்குழாய் நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளது தெரியவந்து உள்ளது. ஆகவே, பண்ணையாளர்கள் அதற்கேற்றாற்போல் தகுந்த கோடைகால பராமரிப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## குன்னூர் ஏல மையத்தில் ரூ.7¾ கோடிக்கு தேயிலை தூள் விற்பனை



குன்னூர்

குன்னூர் ஏல மையத்தில் ரூ.7 கோடியே 89 லட்சத்துக்கு தேயிலைத்தூள் விற்பனையானது.

<u>தேயிலைத்தூள்</u>

குன்னூரில் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலைதூள் ஏலம் நடத்தப்படுகிறது. இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலைத்தூளை ஏலம் எடுத்து வருகின்றனர்.

விற்பனை எண் 14–க்கான ஏலம் கடந்த 7,8–ந் தேதிகளில் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 9 லட்சத்து 56 ஆயிரம் கிலோ தேயிலைத்தூள்

வந்தது. இதில் 6 லட்சத்து 56 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

ரூ.7 கோடியே 89 லட்சத்துக்கு விற்பனை

இந்த ஏலத்தில் 8 லட்சத்து 32 ஆயிரம் கிலோ தேயிலை தூள் விற்பனையானது. இது 88 சதவீதம் ஆகும். இதன் மொத்த மதிப்பு ரூ.7 கோடியே 89 லட்சம் ஆகும். விற்பனையான அனைத்து தேயிலைத்தூள்களும் கிலோவுக்கு 2 ரூபாய் உயர்வு ஏற்பட்டது.

சி.டி.சி. தேயிலைத்தூளின் அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு 198 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலைத்தூள் கிலோவுக்கு 244 ரூபாய் என அதிகபட்ச விலையாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலைத்தூளின் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு 60 ரூபாயில் இருந்து 70 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலைத்தூள் கிலோவுக்கு 100 ரூபாயில் இருந்து 140 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

அடுத்த ஏலம்

டஸ்ட் ரக தேயிலைத்தூளின் சாதாரண வகை கிலோவுக்கு 82 ரூபாயில் இருந்து 87 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலைத்தூள் கிலோவுக்கு 110 ரூபாயில் இருந்து 145 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 15–க்கான ஏலம் வருகிற 14, 15 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 83 ஆயிரம் கிலோ தேயிலைத்தூள் வருகிறது.